International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 03 Issue: 03 July to September 2021 www.irjtsjournal.org

# பத்துப்பாட்டில் தமிழர் பண்பாட்டு விழுமியங்கள்

# (Cultural Values of Tamils in Paththuppāttu)

றூபி வலன்ரீனா பிரான்சிஸ்

*விரிவுரையாளர், மொழித்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*

***ஆய்வுச் சுருக்கம்:***

*தனிமனிதர்கள் ஒருங்குகூடிச் சில நெறிகளின் அடிப்படையில் வாழ்வது சமூகம். தனிமனிதனுடைய சிந்தனையும், பழக்கவழங்கங்களும், பண்பாடுசார் பின்பற்றுகைகளும் சமூகத்தாலேயே அவனுக்கு அவனுக்கு அளிக்கப்படுகின்றன. இன்னின்னவை சமூக நலத்திற்கு உகந்தன என்றும் இன்னின்னவை தீங்காவன என்றும் சமூகம் தன் பட்டறிவால் உணர்ந்துகொள்ளத்தக்கன தள்ளத்தக்கனவற்றைப் பாகுபாடு செய்கின்றது. இவை பற்றிய சிந்தனைகளின் தொகுப்பே அறமாகவும் ஒழுக்கமாகவும் விழுமியங்களாகவும் மரபாகவும் பழக்கவழக்கங்களாகவும் மனிதர்களிடையே தொடர்ச்சியாகக் கடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தனிமனிதன் சமூகத்தின் விதிகளுக்குட்பட்டு அதன் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் பாடுபடவேண்டும் எனச் சான்றோர் எதிர்பார்க்கின்றனர். பல நிலைகளிலும் பண்பட்டிருந்த சங்ககாலச் சமுதாயம் தனிமனிதர்கள் பின்பற்றி நடக்க வேண்டிய பல உயர்நெறிகளையும் அவை தொடர்பான நம்பிக்கைகளையும் பழக்கவழங்கங்களையும் உருவாக்கிப் போற்றியுள்ளது. சில அறக்கோட்டுபாடுகளையும் விழுமியங்களையும் சமூக நடைமுறைகளையும் எடுத்துக்காட்டி, அவை தனிமனிதனைச் சமூகத்தோடு எவ்வாறு தொடர்புபடுத்தியுள்ளன என்பதைச் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூற்றொகுதிகள் கூறும் கருத்துக்களின் வாயிலாக அறியலாம். தனிமனிதர்களின் பண்பினைப் பொறுத்தே சமூகத்தின் பண்பும் அமைய முடியும் என்ற பேருண்மையைத் தனிமனிதர்களுக்கு வகுத்துக்கூறிய கருத்துக்களின் ஊடாகப் புலப்படுத்துகின்றது. இவ் ஆய்வுக்கட்டுரை மூலம் சங்க இலக்கியங்களில் குறிப்பாகப் பத்துப்பாட்டு என்ற தொகுதியில் உள்ள நூல்களின் வாயிலாக எடுத்துக்கூறப்படும் தமிழர் சமூகத்தின் பண்பாடுசார் விழுமியங்களைப் பற்றி எடுத்துரைக்கப்படுகின்றன. பத்துப்பாட்டிலுள்ள ஆற்றுப்படை நூல்கள், அகத்திணை - புறத்திணைசார் நூல்கள் என்பவற்றில் கூறப்படும் பண்பாடுசார் விழுமியங்கள் தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.*

**முதன்மைச் சொற்கள்:**பத்துப்பாட்டு, தமிழர் பண்பாடு, விழுமியங்கள், விருந்தோம்பல்,

பண்பாடு என்பது கற்றுணர்ந்து பகிர்ந்து கொள்ளப்படும் நடத்தை முறைகளின் தொகுப்பாகும் என மானிடவிலாளர் குறிப்பிடுவர். பழந்தமிழ் இலக்கியங்கள் தமிழர் பண்பாட்டினை சேமித்து வைத்திருக்கும் அருமையான முதுசங்களாகும். தமிழர், மிகப் பழங்காலந் தொடக்கம் பண்பாட்டு விழுமியங்களைக் கைக்கொண்டு வாழ்ந்திருந்தமைக்கு இவை சான்றுகளாகின்றன. சங்க இலக்கியம் என்னும் கருவூலம் மிகச் சிறப்பாக இதனை வெளிப்படுத்துகின்றது. சங்க இலக்கியங்களாக விளங்கும் எட்டுத்தொகை. பத்துப்பாட்டு நூல்களுள் பத்துப்பாட்டினை ஆதாரமாகக் கொண்டு இவ்விடயம் இங்கு நோக்கப்படுகின்றது.

திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகியன பத்துப்பாட்டில் அடங்கும் இலக்கிய நூல்களாகும். தமிழர்தம் பண்பாட்டு வாழ்வியல் நெறிமுறைகள் இவற்றில் பொதிந்து கிடக்கின்றன. விருந்தோம்பல் பண்பு. நிலங்களுக்கு ஏற்ற வகையிலான பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகள். தொழில் முறைமைகள், மனித மேம்பாட்டுப் பண்புகள் என அவை பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. மனிதனை மனிதனாக வாழ வைக்கத் தேவையான பண்பாட்டுக் கூறுகளை இவை கொண்டிருக்கின்றன. மிகச் சிறந்த விழுமியங்களை தம் பண்பாட்டின் ஊடாக உலகிற்கு அளித்துள்ளனர்.

பத்துப்பாட்டில் விருந்தோம்பல், மற்றும் உணவுப்பழக்கங்கள் மிக அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

***விருந்தோம்பல்:***

தம்மைக் காணவரும் இரவலர்களை வரவேற்கும் முறைமையில் உயர்ந்த பண்பாடு பேணப்பட்டிருப்பதை பத்துப்பாட்டில் காணலாம். குறிப்பாக ஆற்றுப்படை நூல்கள் தமிழரின் விருந்தோம்பல் பண்பினை விளக்குகின்றன. பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகியவற்றில் குறிப்பிடப்படும் செய்திகளை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம்.

சோழன் கரிகால் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியதே பொருநராற்றுப்படையாகும். பரிசில் பெற்றுத் திரும்பி வரும் பொருநன் பரிசில் பெறச் செல்லும் பொருநனை வழிப்படுத்துவதாக இது அமையும்.

தன்னைநாடி வரும் இரவலரை முதலில் வரவேற்று பின் அவர்கள் அணிந்திருந்த கந்தல் ஆடைக்குப் பதிலாக அழகிய ஆடையினைக் கொடுத்து களைப்புத் தீர பானம் (மது) அளித்து உணவு அளித்து பல நாள்கள் உபசரித்து இறுதியாக பரிசில்கள் நல்கி வழியனுப்பி வைக்கும் விருந்தோம்பல் பண்பினை உடையவர்களாக மன்னர் முதலான புரவலர்கள் இருந்தமையை பொருநராற்றுப்படையில் காணலாம்.

“ ……………………………ஒன்றிய
கேளிர் போல கேள்கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக்கூறி
கண்ணில்காண நண்ணுவழி இரீஇ
பருகுஅன்ன அருகா நோக்கமோடு
………………………………..
வேரொடு நனைந்த வேற்றுஇழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவரநீக்கி
நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுஉரி அன்ன அறுவை நல்கி
………………………………….
போக்கு இல் பொலங்கலம் நிறைய பல்கால்
வாக்குபு தரத்தர……..”(பொருநராற்றுப்படை: 73 – 87)

என்ற பாடலில் முன்பே நட்புக் கொண்டவர்களைப்போல அரசன் பார்த்தமை, விருப்புடன் பேசியமை. அன்பான பார்வையால் அவர்களை நோக்கியமை, அருகில் இருத்தியமை, அவர்களது அழுக்கடைந்த ஆடைகளுக்குப் பதிலாக புதிய நல்ல ஆடைகளை அளித்தமை, களைப்புத் தீர மதுவினை அளித்தமை ஆகிய பண்பாட்டு விழுமியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம்.

மேலும் அன்று மட்டுமல்ல, பல நாட்களாக அவர்களை உபசாரம் செய்கின்றான் அரசன். அவன் அளித்த உணவு பற்றியதாகப் பின்வரும் அடிகள் வருகின்றன.

“விரல்என நிமிர்ந்த நிரல்அமை புழுக்கல்

பரல் வறைக்கருனை காடியின் மிதப்ப
அயின்றகாலை பயின்று இனிதிருந்து
கொல்லைஉழு கொழுஏய்ப்ப பல்லே
எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி
உயிர்ப்பிடம் பெறாஅது ஊண்முனிந்து''

(பொருநராற்றுப்படை: 114 – 119)

அரிசியால் சமைக்கப்பட்ட சோறு, புலால் ஆகியவற்றை அவர்கள் உண்டார்கள். இவற்றை அவர்கள் இரவும் பகலும் தொடர்ந்து உண்டமையால் கொல்லையை உழுத கலப்பையைப் போல பற்கள் மழுங்கி விட்டன எனக் கூறப்படுகின்றது.

அவர்கள் தாமாகவே விரும்பிப் போக எத்தனித்தபோது கரிகாலன் நிறைய பரிசில்களையும் கொடுத்து அனுப்புகின்றான்.

''துடிஅடியன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்க என
தன்னறி அளவையின் தரத்தர யானும்
என்னறித அளவையின் வேண்டுவ முகந்துகொண்டு
இன்மைதீர வந்தனென்'' ( பொருநராற்றுப்படை: 125 – 129)

மேலும் விருந்தினரை வழியனுப்பும்போது ஏழடி பின்தொடர்ந்து செல்லும் முறைமை இருந்தமையையும் பொருநராற்றுப்படை குறிப்பிட்டுள்ளது. ('காலின் ஏழடிப்பின் சென்று': பொருந 166)

சிறுபாணாற்றுப்படையிலும் விருந்தோம்பல் குறித்து விபரிக்கப்படுகின்றது. (ஓய்மாநாட்டு) நல்லியக்கோடனை (இடைக்கழி நாட்டு நல்லூர்) நத்தத்தனார் பாடியதே சிறுபாணாற்றுப்படையாகும். நல்லியக்கோடன் தன்னிடம் பொருள் வேண்டி வந்தோரை உபசரிக்கும் பண்பினைப் பின்வரும் அடிகள் கூறுகின்றன.

" ……………………………………..மாசில்
காம்புசொலித் தன்ன அறுவை உடீஇப்
பாம்புவெகுண் டன்ன தேறல்நல்கிக்
…………………………பல்வேறு அடிசில்
…………………………………….
விளங்குபொன்கலத்தில் விரும்புவனபேணி
ஆனாவிருப்பின் தான் நின்று ஊட்டி'' (சிறுபாணாற்றுப்படை: 236 – 245)

என்ற பாடலில் மென்மையானதும் தூய்மையானதுமான ஆடைகளை முதலில் அணியச்செய்தல், மதுவினை (கள்) அளித்தல், பல்வேறு உணவுகளை பொன்கலத்தில் அளித்தல், விருப்புடன் தானே ஊட்டுதல் முதலான விடயங்கள் கூறப்படுகின்றன. புரவலர்கள் தம் கீழ் உள்ளோரை அனுப்பி விருந்தோம்பல் செய்யாது தாமே முன்னின்று கொடுக்கும் உயர் பண்பு இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. பாணர்கள் திரும்பிச் செல்லும்போது தேரை அதன்

பாகனோடும், மற்றும் யானை, குதிரை, அணிகலன்களையும் கொடுத்தனுப்புதலும் கூறப்படுகின்றது.(சிறுபாணாற்றுப்படை:259- 261)

தொண்டைமான் இளந்திரையனை கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படையிலும் விருந்தோம்பல் என்னும் உயரிய பண்பாட்டின் சிறப்பினைக் காணலாம்.

இளந்திரையன், பாணர்களைக் கண்டதும் முதலில் அவர்களின் அழுக்கடைந்த கந்தல் ஆடையை நீக்கி மென்மையான ஆடைகளை அளித்ததுடன். ஊனின் துண்டங்களை நல்ல நெல்சோற்றுடன் சமையல் வல்லுநனைக் கொண்டு செய்வித்து பல்வேறு வகையான உணவுகளை விருப்புடன் வழங்கி உடனிருந்து முகம் மலர்ந்து ஊட்டிப் பின் பரிசில் தந்து வழியனுப்பியமை கூறப்படுகின்றது.

‘‘…………………………..நின்அரைப்
பாசி அன்ன சிதர்வை நீக்கி
ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம்
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் உடீஇ
கொடுவாள் கதுவிய வடுஆழ் நோன்கை
வல்லோன் அட்ட பல்ஊன் கொழுங்குறை
அரிசெத்து உணங்கிய பெருஞ்செந் நெல்லின்
தெரிகொள் அரிசித் திரள்நெடும் புழுக்கல்
அருங்கடித் தீம்சுவை அமுதொடு பிறவும்
விருப்புடை மரபின் கரப்புடை அடிசில்
மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகன் அமர்ந்து
ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி’’

(பெரும்பாணாற்றுப்படை: 465 – 479)

தன்னைநாடி வந்த பாணரை நன்னன் விருந்தோம்புதலை மலைபடுகடாம் என்னும் நூலிலும் காணலாம்.
இழைமருங்கு அறியா நுழைசால் கலிங்கம்
எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ
முடுவல் தந்த பைந்நிணத் தடியொடு
நெடுவெண் நெல்லின் அரிசி முட்டாது
தலைநாள் அன்ன புகலொடு வழிசிறந்து
பலநாள் நிற்பினும் பெறுகுவிர்

(மலைபடுகடாம்: 561 – 566)

என்பதில் ஆடையை வழங்கி உணவு தந்து உபசரிக்கும் பண்பு குறிப்பிடப்படுகின்றது.

பெரும்பாணாற்றுப்படையில் பல்வேறு சமூகக்குழுக்களின் விருந்தோம்பற் பண்பு விளக்கப்பட்டுள்ளது. இளந்திரையனை நாடிச் செல்லும் வழியில் எதிர்ப்படும் நிலப்பகுதிகளையும் அவ்வப் பகுதிகளில் வாழும் வெவ்வேறு குழும மக்கள்

தத்தம் முறையில் விருந்தோம்பும் சிறப்பினையும் இதில் காணலாம். அதேபோல ஏனைய பத்துப் பாட்டு நூல்களிலும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை முதலிய நிலங்களின் உணவுப்பழக்கங்களையும் இதனூடாகக் காண முடியும்.

***குறிஞ்சி:***

நன்னனுக்குரிய சவ்வாது மலையின் அடிவாரத்தில் இருந்த சிற்றூர்களில் வாழ்ந்த மக்கள் தினைச்சோற்றையும் நெய்யில் வெந்த இறைச்சியையும் தாமும் உண்டு விருந்தினருக்கும் அளித்தமையை

“பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்” (மலைபடுகடாம்: 168 – 169)

என்னும் பகுதி விளக்குகின்றது.

“சுவல்விளை நல்லின் செவ்அவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூழ் உடுபின்
வறைகால் யாத்தது”

(பெரும்பாணாற்றுப்படை: 131 – 133)

சிவந்த நெல் சோறும் நாயால் கவ்வி வரப்பட்ட உடும்பின் கறியும் எயினர் அரணில் கிடைக்கும்.

குறமகள் சமைத்த உணவு பற்றி மலைபடுகடாம் வருணித்துள்ளது.

“அருவிதந்த பழஞ்சிதை வெண்காழ்
வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை
முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை
பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ
வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனி
இன்புளிக் கலந்து மாமோ ராகக்
கழைவளர் நெல்லின் அரிஉலை ஊழ்த்து
வழைஅமை சாரல் கமழத் துழைஇ
நறுமலர் அணிந்த நாறுஇரு முச்சிக்
குறமகள் ஆக்கிய வால்அவிழ் வல்சி
அகம்மலி உவகை ஆர்வமொடு அளைஇ
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்” (மலைபடுகடாம்: 174 – 185)

கடமானின் கொழுத்த தசையினையும் எய்ப்பன்றியை கொன்று பெற்ற பசுமையான நிணத்தைப் பிளந்து எடுத்த தசையினையும் பெண் ஓடிக் கடித்த உடும்பின் தடியொடு கலந்து புளியம்பழத்தின் இனிய புளிப்பையும் பசு எருமை இவற்றின் மோரை உலையாக வார்த்து மூங்கில் நெல் அரிசியை உலையில் பெய்து சுரபுன்னை மரங்கள் நெருங்கி வளர்ந்துள்ள காடு மணக்கும்படியாக கலந்து துழாவி மணம்மிக்கதாக சமைக்கப்பட்டு இவ்வுணவு.

***முல்லை:***

தினையரிசிச்சோற்றையும் வரகரிசிச் சோற்றையும் அவரைப் பருப்பையும் கலந்து செய்த உணை உண்டமையை பெரும்பாணாற்றுப்படை குறிப்பிட்டுள்ளது. ( பெரும்பாணாற்றுப்படை: 167, 168, 192 – 195) நுண்ணிய அரிசியை வெள்ளாட்டு இறைச்சியுடன் சேர்த்து ஆக்கப்பட்ட உணவையும் (மலை 440 – 445) மூங்கில் அரிசியையும் நெல் அரிசியையும் புளி கரைக்கப்பட்ட உலையில் இட்டு சமைத்த உணவையும் இந்நிலத்து மக்கள் உண்டனர். (மலைபடுகடாம்: 434 – 436)

***மருதம்:***

மருதநில மக்கள் வெண்சோற்றை நண்டு, பீர்க்கங்காய் ஆகியவை சேர்த்துச் செய்யப்பெற்ற உணவுக் கலவையுடன் உண்டமையை சிறுபாணாற்றுப் படையில் காணலாம்.

“இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த
அவைப்புமாண் அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு …..” (சிறுபாணாற்றுப்படை: 193 – 195)

தொண்டைநாட்டு மருதநிலத்தில் சிறுபிள்ளைகள் காலையில் பழைய சோற்றை உண்டனர். பழைய சோற்றின்மேல் வெறுப்பு ஏற்பட்டால் அவலை இடித்து உண்டனர். (பெரும் 254 – 256)அந்நாட்டுத் தோப்பில் வாழும் மருதநில உழவர் சோற்றோடு பலாப்பழம், இளநீர், வாழைப்பழம், நுங்கு, வள்ளிக்கிழங்குபோன்றவற்றையும் சேர்த்து உண்டனர். (பெரும் 356 – 366)

***நெய்தல்:***

பட்டினப்பாலை நெய்தல்நில உணவு பற்றிய செய்திகளைத் தருகின்றது. கடலில் பெற்ற இறால்மீனையும், வயலில் பெற்ற ஆமையையும் சமைத்து உண்டனர். (பட்.பாலை 63 – 64)பனங்கள்ளையும் (பட்.பாலை 89), நெல்லரிசிக் கள்ளையும் (பட்.பாலை 93) பருகினர். கள் விற்கும் கடைகளில் மீன், விலங்கு என்பவை பொரித்து விற்கப்பட்டன. (பட். பாலை 176 – 178)ஆண் பன்றியின் இறைச்சியும் உணவுக்காகப் பயன்பட்டமையையும் காணலாம். (பெ.ஆ 339 – 345)

***பாலை:***

தொண்டைநாட்டு பாலைநில மக்கள் புல்லரிசியைச் சேர்த்து நிலத்தில் உள்ள உரலில் குற்றிச் சமைத்த உணவை உப்புக் கண்டத்தோடு உண்டனர்.
தெய்வத்திற்கு தேக்கு இலையில் உணவு படைத்துக் கொடுப்பது போல எயினர் பாணருக்கு உணவளிப்பர்.

“தெய்வமடையின் தேக்கிலைக் குவைஇ நும்
பைதீர் கடும்பொடு பதம்மிகப் பெறுகுவிர்” (பெரும்பாணாற்றுப்படை: 104 – 105).

சங்க காலத்தில் பெரும்பாலும் புலால் உணவையே மக்கள் உண்டனர். ஆயினும் வேதியர் மாமிசமற்ற உணவை உண்டமையை

“சடர்க்கடை பறவைப் பெயர்ப்படு வத்தம்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து
உருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து

கஞ்சக நறுமுறி அளைஇ பைந்துணர்
நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் ….”

(பெரும்பாணாற்றுப்படை: 305 – 310)

என்னும் அடிகளில் காணலாம்.

இராசன்னம் என்னும் பெயருடைய நெல் சோற்றை பசுவின் பாலில் உருவாக்கப்பட்ட வெண்ணெயில் வதக்கி மாதுளையின் பசுங்காயை மிளகுப்பொடியுடன் கலந்து கருவேம்பின் இலையுடனும் மாங்காய்களுடனும் கலந்து அதை ஊறுகறியாகக் கொள்வர் எனப்படுகின்றது. உப்பை ஊர் ஊராகச் சென்று விற்பனை செய்யும் உமணர் ஊறுகாய்ப்பானைகளைத் தம் வண்டிகளில் கட்டிச் சென்றமை பற்றிய செய்திகளும் உண்டு.
புளியங்காய். நெல்லிக்காய் முதலியன ஊறவிட்டு வைப்பது காடி (ஊறுகறி) எனப்பட்டது.

***பண்டமாற்று:***

பண்டமாற்று வழக்கம் அக்காலத்தில் வழக்கில் இருந்தமையை அறிய முடிகின்றது. நானிலங்களில் வாழ்ந்த மக்கள் தத்தம் நிலப்பகுதிகளில் பெற்றவற்றை பிறருக்கு அளித்து அவர்களிடமிருந்து தமக்குத் தேவையான பொருள்களைப் பெற்று வாழ்ந்தார்கள். கொண்டும் கொடுத்தும் வாழும் சமூக நோக்கு இருந்தமையை இதிற் காணலாம்.
“தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்
மீன் நெய்யொடு நறவு மறுகவும்
தீங் கரும்போடு அவல் வகுத்தோர்
மான் குறையொடு மது மறுகவும்”

(பொருநராற்றுப்படை: 214 – 217)

குறிஞ்சி நில மக்கள் தேனையும், கிழங்கையும் கொடுத்த நெய்தல் நில மக்களிடமிருந்து மீனையும், கள்ளையும் பெற்றனர். மருதநில மக்கள் சுவையான கரும்பையும், அவலையும் கொடுத்து மான் இறைச்சியையும், மதுவையும் பெற்றனர் என இவ்வடிகள் குறிப்பிடுகின்றன.
பண்டமாற்று முறை, உணவு உற்பத்தி முதலான விடயங்கள் மூலம் இப் பண்பாடு கொண்டிருந்த பொருளாதார முறைமைகளை அடையாளப்படுத்த முடிகின்றது.
சங்க இலக்கியங்கள் மூலம் திணைகள், அவை சார்ந்த அக மற்றும் புற மரபுகள் முதலானவற்றை அறிய முடிகின்றது. ஒவ்வோர் நிலப்பிரிவும் தனக்கேயுரிய பண்பாட்டு மரபுகளைத் தனித்துவமாகக் கொண்டிருந்தது.

உணவு, பண்பாட்டின் அடையாளமாகவும் சமூகத் தகுதியை உணர்த்துவதாகவும் அமைந்துள்ளது. இதனாலேயே உணவு சார்ந்த பழக்க வழக்கங்களை அறிந்து கொள்வதன் மூலம் வெவ்வேறு பண்பாடுகளைப் புரிந்து கொள்ளலாம் என அறிஞர் கருதுவர்.

***வழிபாட்டு முறைகள்:***

தமிழர் பண்பாட்டில் சமயங்களும் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளன. அந்த வகையில் பத்துப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சமயச் செய்திகளை நோக்கலாம்.
முருகவழிபாட்டைப் பற்றிய செய்திகளை திருமுருகாற்றுப்படை சிறப்பாகத் தந்துள்ளது.

திருமால் பற்றிய குறிப்பு உள்ளமையை

“பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்” (பெரும்பாணாற்றுப்படை: 373) என்பதனால் அறியலாம்.

சிவனைப் பற்றிய குறிப்புகள் மதுரைக்காஞ்சியில்
“மழுவாள் நெடியோன்” (மதுரைக்காஞ்சி: 455) எனவும்,

சிறுபாணாற்றுப்படையில்
“ஆலமர் செல்வன்”(சிறுபாணாற்றுப்படை: 97) எனவும் குறிப்பிடப்படுகின்றன.

மதுரையில் கோவில்களில் திருவிழாக்கள் நடைபெற்றன. திருவிழாவின் தொடக்கம் பறையறைந்து அறிவிக்கப்பட்டது. ஏழாம் நாள் மாலையில் தீர்த்தமாடும் மரபு காணப்பட்டது. இதனை மதுரைக்காஞ்சியில் காணலாம்.

“கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி
ஆடுதுவன்று விழவின்” (மதுரைக்காஞ்சி: 427 – 428)

மதுரைக்காஞ்சியில் பெண்கள் தத்தமது கணவரையும் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு அவரவர் விரும்பியபடி பௌத்தப்பள்ளிக்கும், அந்தணர் பள்ளிக்கும், சமணப்பள்ளிக்கும் சென்றமை குறிப்பிடப்படுகின்றது. (மதுரை 461 – 488) ஈது மத சுதந்திரத்தை வலியுறுத்தும் செய்தியாகும்.

பரதவர், சினையுடைய சுறாவின் கொம்பை நட்டு தம் மனையில் உள்ள தெய்வத்தை வணங்கினர்.
“சினைச் சுறவின் கோடுநட்டு
மனைச் சேர்த்திய வல்அணங்கினால்” (பட்டினப்பாலை; 86 – 87)

முழுமதிநாளில் கடலுக்குச் செல்லாது தம் மகளிருடன் மகிழ்ந்திருந்தனர்.

தமிழர் பண்பாட்டில் இறப்பின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஈமச்சடங்குகள் முறைமை நம்பிக்கையின் அடிப்படையில் தோற்றம் பெற்றதைக் காணமுடியும். முற்காலத்தில் புதைகுழியின் மீது கல் நாட்டப்படுதல் ஒரு மரபாகும். சங்க இலக்கியங்களில் இத்தகைய நடுகல் பற்றிய குறிப்புகள் உள்ளன. நடுகற்களில் இறந்த வீரனின் உருவம், பெயர் விபரங்கள் குறிக்கப்படுவதும் உண்டு. பற்றி சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. நடுகற்களை வழிபடும் முறைமை இருந்தமையை மலைபடுகடாம் பதிவு செய்துள்ளது.

“…………………………….நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
கல்லேசு கவலை எண்ணுமிகப் பலவே” (மலைபடுகடாம்: 387 – 389)

கடல்வாணிகம் பற்றிய குறிப்புகளும் உள்ளன. தமிழர் வாணிகம் கடல் கடந்தும் நடைபெற்றமையை இதன் மூலம் அறியலாம். பட்டினப்பாலையில் மிகச் சிறப்பாக இச்செய்தியைக் காணலாம். பட்டினப்பாலையில் கடல் வாணிகம் பற்றிய செய்திகள் உள்ளன. கடற்கரைத் துறைமுகமாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தில் ஏற்றுமதி இறக்குமதி மிகுதியாக நடந்தன.

“வெள்ளை உப்பின் கொள்ளைசாற்றி

நெல்லொடுவந்த வல்வாய்ப் ப∴றி
பணைநிலைப் புரவியின் அணைமுதல் பிணிக்கும்''
( பட்டினப்பாலை: 29 – 31)

என்பதில் வெள்ளை உப்பை விலை கூறி விற்று பண்டமாற்றாகப்பெற்ற நெல்லோடு வந்த படகுகளை உப்பங்கழியின் கரையில் பந்தியில் நிற்கும் குதிரைகளைப்போல் கட்டும் தறிகளில் கட்டியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

''நீரினின்றும் நிலத்து ஏற்றவும்
நிலத்தினின்று நீப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்புஅறியாமை வந்துஈண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்அணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிடூடைப் போரேறி''

(பட்டினப்பாலை: 129 – 136)

என்பதில் கடல்வழி வந்த பொருள்களை நிலத்தில் ஏற்றல். நிலத்திலிருந்து கடலில் மரக்கலங்களில் ஏற்றுதல், சுங்கச்சாவடியில் வைத்து புலி இலச்சினை பொறித்து வெளியேற்றுதல் முதலான விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன.

மக்கள் உயர்ந்த பண்பாட்டோடு வாழ்ந்தமையை பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. குறிப்பாக வணிக மக்களின் வாழ்வியல் விழுமியத்தை இது சுட்டுகின்றது.

''நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நல்நெஞ்சினோர்
வடுஅஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதும் மிகை கொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்''

(பட்டினப்பாலை: 206 – 211)

நடுவு நிலைமையோடு வாழ்ந்து உண்மை பேசி பழிக்கு அஞ்சி கொள்ளும்போது தாம் மிகுதியாகக் கொள்ளாது கொடுக்கும்போது குறைவாகக் கொடுக்காதும் வாழ்ந்தனர்.
குறிஞ்சிப்பாட்டு ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ்ப்பண்பாட்டை உணர்த்தும் வகையில் அமைந்தது.

முத்து மணிகள் பொன் போன்றவற்றில் குறைகள் ஏற்பட்டால் அக்குறைகளை நீக்கிவிட முடியும் ஆனால் தமிழ்ப்பண்பாட்டிற்கு அச்சாணியாக இருக்கும் சான்றாண்மையும் பெருந்தன்மையும் இயல்பும் குறைந்தால் அவற்றை நீக்கிவிட முடியாது என்பதை குறிஞ்சிப்பாட்டு உணர்த்துகின்றது.

"முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வரும் குரைய கலங்கெடின் புணரும்
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறுகாட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னார் தொல்மருங்கு அறிஞர்"

(குறிஞ்சிப்பாட்டு: 13 – 18)

பூக்கள், பூமாலைகள், வெற்றிலை, பாக்கு, சுண்ணம் முதலான பல்வேறு பொருள்கள் விற்கப்பட்டமையை மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது. பெண்களும், ஆண்களும் விற்பனை செய்வதில் ஈடுபட்டமையைக் காணலாம். உழைப்பினால் தம் பொருளாதாரத்தினை அவர்கள் வளப்படுத்தினர்.

"பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்
பலவகை விரித்த எதிர் பூங்கோதையர்
பலர்தொகுபு இடித்த தாதுஉகு சுண்ணத்தர்
தகைசெய் தீம்சேற்று இன்னீர் பசுங்காய்
நீடுகொடி இலையினர் கொடுசுடு நூற்றினர்"

(மதுரைக்காஞ்சி: 397 – 401) (பிடகு– பூந்தட்டு)

மனைதோறும் சென்று மலர் விற்றனர். பூமாலைகளை விற்பனை செய்தனர்.

"கமழ் நறும் பூவொடு மனைமனை மறுக" (மதுரைக் 423)

நற்பண்புகளுக்காக அரசனால் காவிதிப்பட்டம் வழங்கப்படும் மரபு முன்னர் இருந்தது. இல்லறத்தை நல்லறமாகப் பேணி. பழி பாவங்களை நீக்கி சான்றாண்மையுடன் அத்தகையோர் வாழ்ந்த பண்பாடு குறித்து மதுரைக்காஞ்சி ( 494 – 499) குறிப்பிடுகின்றது.

"நன்றும் தீதும் கண்டாய்ந்து அடக்கி
அன்பும் அறனும் ஒழியாது காத்த
பழிஒரீஇ உயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மக்களும்"

இவ்வாறு தமிழரின் உயரிய பல பண்புகளை வெளிப்படுத்துவனவாய் பத்துப்பாட்டு விளங்கக் காணலாம்.

***உசாத்துணை:***

1. சங்க இலக்கியம்: பத்துப்பாட்டு : மூலமும் தெளிவுரையும், 2010, தெளிவுரை - ச.வே. சுப்பிரமணியன், சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.
2. கடிகாசலம்,ந., சிவகாமி. ச., (ப.ஆ)., (1998), சங்க இலக்கியம்- கவிதையியல் நோக்கு, சிந்தனைப்புல மதிப்பீடு, சென்னை: உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்.
3. சிதம்பரனார், சாமி., 1962, எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், சென்னை: இலக்கிய நிலையம்.
4. தட்சிணாமூர்த்தி, அ., 2001, சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள்,தஞ்சாவூர், மங்கையர்க்கரசி பதிப்பகம்.